# கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
## சுற்றாடல் அமைச்சு

MEPA

# பதவி வெற்றிடங்கள்

2008ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க கடல் மாசுபடுத்தலை தடுக்கும் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் நிரந்தர பணியாட்தொகுதியிலுள்ள பின்வரும் பதவிகளுக்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொழில் விபரங்கள்:

2008ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க கடல் மாசடைவதைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள வேலைகளை நிறைவேற்றுதல்.

**1. உள்ளகக் கணக்காய்வாளர் (MM 1-1) – 01 வெற்றிடம்**

**வெற்றிடம் நிலவும் மாவட்டம் - பிரதான அலுவலகம் (கொழும்பு)**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் வணிகவியல், கணக்கியல், நிதி முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், வியாபார முகாமைத்துவம், கணக்கியல் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

அத்துடன்

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான விடயத்துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

02. பதவிக்கு இயைபான விடயத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் மற்றும் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான விடயத்துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
02. ''கனிஷ்ட முகாமைத்துவம்'' (JM) சேவை வகுதியில் நிதிப் பிரிவில் அல்லது கணக்காய்வுப் பிரிவில் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

வயது : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

சம்பள அளவு : MM 1-1 : 2025 (ரூபா 91,690 - 10x2, 480 - 15x3, 450 - 168,240/=)

**2. ஆய்வுகூட உதவியாளர் (PL 2) - 01 வெற்றிடம்**

**வெற்றிடம் நிலவும் மாவட்டம் - காலி ஆய்வுகூடம்**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

இயைபுடைய பதவியின் கடமைகளுக்கு இயைபாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறனில் N.V.Q. இரண்டாம் (2) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. குறித்த துறையில் ஐந்து (5) வருடகால அனுபவம் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றில் குறித்த பதவியின் கடமைகளுக்கு அமைவாக, தொழில்சார் பரீட்சையின் போது உறுதிசெய்யக்கூடிய தேசிய தொழிற்றிறனில் N.V.Q. இரண்டாம் (2) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சியுடன் ஆரம்ப தேர்ச்சியற்ற PL - 1 சேவை வகுதியின் ஊழியர்,
02. இயைபுடைய பதவியின் கடமைகளுக்கு இயைபாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறனில் N.V.Q. இரண்டாம் (2) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

வயது : 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

சம்பள அளவு : PL 2 - 2025 : (ரூபா 42,300-10x490 - 10x540 - 10x590 - 12x630 - 66,060/=)

**பொதுவானவை:**

**01. சகல விண்ணப்பதாரர்களும்,**

i. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்குத் தேவையான உள மற்றும் உடல் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**02. தகைமை பெறும் தினம்:**

சேவைக்கு / பதவிக்கு நியமிப்பதற்காக விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பதாரர் மேற்கூறப்பட்ட பதவிகளுக்குத் தேவையான தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் சகல விதத்திலும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**03. நியமனத்தின் தன்மை:**

நிரந்தரமான பதவி. ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியரினால் செலுத்தப்படும் 10% த்திற்கு மேலதிகமாக அதிகார சபையினால் 15% பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) 3% மேலதிகமாக பங்களிப்புச் செய்யப்படும்.

**04. விண்ணப்பப் படிவத்தை அனுப்புதல்:**

i. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை A4 அளவான தாளில் ஒரு பக்கத்தை பயன்படுத்தி தயாரித்து முதல் பக்கத்தில் தமது பிரத்தியேக விபரங்களையும் இரண்டாம் பக்கத்தில் கல்வித் தகைமைகளையும் மூன்றாம் பக்கத்தில் தொழில்சார் தகைமைகள் மற்றும் தொழில் அனுபவங்களையும் மற்றும் நான்காம் பக்கத்தில் வெளிவாரி செயற்பாடுகளை உள்ளடக்கி உறவினர் அல்லாத இரண்டு (02) சான்றுபகர்வோரின் பெயர்கள் சகிதம் விண்ணப்பத்தைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்.
ii. அண்மையில் பெற்றுக்கொண்ட 2 நன்னடத்தைச் சான்றிதழ், கிராம சேவகரின் சான்றிதழ், பொலிஸ் அறிக்கை, தேசிய அடையாள அட்டை, சகல கல்விச் சான்றிதழ்கள், ஏனைய தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களில் சான்றுபடுத்தப்பட்ட புகைப்படப் பிரதிகளை இணைத்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2025-09-26ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, இல. 177, நாவல வீதி, நாராஹேன்பிட்டி, கொழும்பு-05 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு தேசிய அடையாள அட்டை மற்றும் மேற்கூறிய புகைப்படப் பிரதிகள் மூலம் சமர்ப்பித்துள்ள சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
iii. ஒன்றுக்கும் மேற்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
iv. அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனம் மற்றும் நியதிகள் சட்ட சபைகளில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
v. சகல வகையிலும் முழுமையற்ற, அடிப்படைத் தகைமைகள் அற்ற, இயைபுடைய சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படாத மற்றும் நிர்ணயிக்கப்பட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்துபோகும் விண்ணப்பங்கள் தொடர்பில் எமது அதிகாரசபை பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,**
**இல. 177, நாவல வீதி, நாராஹேன்பிட்டி,**
**கொழும்பு 05.**
**2025-09-12**